www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

08 JANUARY 2022 - SUNDAY

Pages - 10

E Paper - # 023 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk

## இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில்



உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

02 »»

# மதங்களையும், மத நம்பிக்கைகளையும் புண்படுத்துவதை நிறுத்த வேண்டும்



### இந்த நாடு அனைத்து மக்களுக்கும் சொந்தமானது

### சஜித் பிரேமதாஸ கருத்து

எவருக்கும் மதத்தை நம்புவதற்கும் அவ்வாறு நம்பாதிருப்பதற்கும் உரிமை உண்டு என்றாலும்,பிறருடைய நம்பிக்கைகளையும் மதங்களையும் புண்படுத்தும் உரிமை யாருக்கும் இல்லை

02 »»

## அன்று மௌனித்த மன்சூர் இன்று வாய்திறப்பது சமூக பக்தியன்று!

### மன்சூரின் அறிக்கைக்கு இ.பா.உ அப்னான் காட்டம்!!



சம்மாந்துறையின் வட்டார பிரிப்பு விவகாரத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் அதிகாரமிருந்த காலத்தில் கைவிரல்களை வாயில் வைத்துக்கொண்டிருந்ததை மறந்து தவிசாளர் நௌஷாட்டுக்கு துரோகி முத்திரை குத்த முனைகிறார்.

அதற்காக தவிசாளரையும் இது விடயத்தில் உத்தமர் என வியாக்கியானம் கூற முடியாது.

இவ்வாறு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் தெரிவித்தார்.

02 »»

## சம்மாந்துறைக்கு நௌசாட் செய்தது பெரும் துரோகம்!

### முன்னாள் எம்.பி. மன்சூர் பகிரங்க குற்றச்சாட்டு!!

"சம்மாந்துறைக்கான வட்டார வரைபை முட்டாள்தனமாகவும் துரோகத்தனமாகவும் வடிவமைத்து சட்டமாக்கிய தவிசாளர் நௌசாட்"

- இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தவிசாளர் நௌசாட்டை பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.


02 »»





## முஸ்லிம் சமய விவகார திணைக்கள பணிப்பாளர் யார்?

### பைசல் ஆப்தீனுக்கே அதிக வாய்ப்பு



வெற்றிடமாகியுள்ள முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவது உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக தாமதமாகலாம் என புத்தசாசன அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் நேர்முகப் பரீட்சையில் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த

02 »»



## குமார் நடேஷனுக்கு இந்திய விருது

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வீரகேசரி பத்திரிகை

02 »»

### பௌத்தர்களின் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ள சேபால

## அதானுக்கும் தடை விதிக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தார்

பொத்துஹரையில் நிர்மாணிக்கப்பட்ட போலி தலதா மாளிகைக்கு ஆதரவாக தனது யூ டியூபில் கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்

02 »»

## தமிழ்க் கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது

### – தமிழரசு ஏகோபித்த தீர்மானம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏகோபித்த தீர்மானம்

02 »»

## உயர்தரத்துக்கு தோற்றவிருந்த மாணவன் கடலில் மூழ்கி மரணம்

### ஏறாவூரில் பெரும் சோகம்

ஏறாவூர் சவுக்கடி கடலில் மூழ்கி மாணவன் ஒருவன்

02 »»

### பெப்ரவரி முதல் வாரத்தில்

## யாழ். – தமிழ்நாடு கப்பல் சேவை

யாழ்ப்பாணத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலான

02 »»

## சமூக ஊடகங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம்

### ஆராய்கிறது அரசு

சமூக ஊடகங்கள் தொடர்பாக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு

02 »»

## தேர்தலை குழப்பியடிக்கும் முயற்சிகளுக்கு புத்திஜீவிகள் கடும் கண்டனம்

### மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு

(சுஐப் எம்,காசிம்)

உள்ளூராட்சி சபைத்தேர்தல்

02 »»

## அன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவிசாளர் நௌசாட்டை சாடியிட்ட முகநூல் அறிக்கையை விலாசித்தள்ளிய போதே அப்னான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 2013 ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையில் அதிகாரம் பொருந்திய பலம்பெற்ற கட்சிகளாக மு.கா. - த.தே.கூ. ஆகியன மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள் அக் காலப் பகுதியில் அதே அரசாங்கத்தில் பெரும் பலம் பொருந்திய அமைச்சராக அதாவது நீதியமைச்சராக ரவூப் ஹக்கீம் இருந்தார்.

அதே காலப் பகுதியில் மாகாண சபையில் அமைச்சராக இருந்த இதே முன்னாள் மன்சூர் எதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்று நௌசாட்டின் முட்டாள்தனம் புரியாமல் இன்று வசைபாடுகிற விடயம் இவரது சுய அரசியலின் அசமந்தப் போக்கை அச்சொட்டாக வெளிக் காட்டுகின்றது.

காரைதீவு, நாவிதென்வெளி, அட்டாளைச்சேனை போன்ற சம்மாந்துறையை விட பரப்பளவில் சிறிய ஊர்களுக்கான பிரதிநிதித்துவ ஒதுக்கீடுகளும், அவர்களுக்கான வட்டாரப் பங்கீடுகளையும் ஒப்பிடுகையில் நௌசாட் பாரிய துரோகம் இழைத்துள்ளார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இன்றைய நிலையில் சம்மாந்துறை பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கிறோம்.

ஆனாலும், காக்கை வடை பறித்த கதைபோல அன்று அன்னார்ந்து பார்த்துக் கொண்டு இருந்தவர்கள் இன்று குருட்டுத்தனத்தையும், சமூக ஏமாற்றத்தையும் பற்றி வசைபாடக்கூடாது.

அன்றே அதிகாரத்திலிருந்த நீங்கள் நெஞ்சை நிமிர்த்தி நௌசாட்டை எதிர்த்திருந்தால் இன்று வியாக்கியாணம் புரியத் தேவையில்லை.

எனவே, நௌசாட்டை இவ்விடத்தில் நியயப்படுத்த முடியாது. அதே வேளை சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் தலையைக் காட்டும் இவ்வாறானவர்களின் கருத்துக்களையும் ஏற்க முடியாது." - என்றார்.

## மதங்களையும்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம்'வேலைத்திட்டத்தின் கீழ் 65 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம்(5,000,000) ரூபா பெறுமதியான பாடசாலை பேருந்து வண்டியொன்று ஜா-எல நிவன்தம ஜினராஜ கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்களால் நேற்று (06) அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

இந்நாடு அனைத்து மதத்தினரும் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய நாடு என குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர்,குறிப்பிட்ட சில புரட்சிக் கும்பல்களின் மதத்திற்கு எதிரான கருத்துக்களைக் கண்டிக்கிறோம்.

புரட்சி பற்றி பேசும் தரப்பினர் தலதா மாளிகையையும் பௌத்த மதத்தையும் அவமதித்து பேசியதை வன்மையாக கண்டிப்பதாகவும் இவ்வாறானவர்களுக்கு சமூகத்தில் இடம் வழங்கக்கூடாது எனவும் மதம் குறித்து வேறுநிலைப்பாடுகள் இருந்தாலும் ஏனையவர்களுக்கு தாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்குரிய உரிமை அடிப்படை உரிமை சார்ந்தது.

மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையில் பிரிவினையை உருவாக்குவதன் காரணமாக, வரலாற்றில் இருந்து எண்ணற்ற பாடங்கள் கற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,பரஸ்பர நம்பிக்கைகளை மதித்து நல்லிணக்கத்தை பரப்புவது அனைவரினதும் பொறுப்பாகும்.

மதத்தைக் கொண்டு,இனத்தைக் கொண்டு பிரிவினைக்கு இங்கு இடமில்லை எனவும் நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் சகவாழ்வு நாட்டிற்கு இன்றியமையாதது எனவும்,சகவாழ்வின் பிரகாரமே நாடு முன்னேற முடியும்.

இனவாதத்தைப் பேசி பிளவுகளை ஏற்படுத்துவதனால் அரசியல்வாதிகளே வெல்லுவதாகவும்,நாட்டு மக்களுக்கும் நாடுமே தோல்வியைத் தழுவுகிறது.

அரசியல் கட்சிகள் தரப்புகளாக பிரிந்து தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

## தேர்தலை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தொடர்பில் அரசாங்கம் நடந்து கொள்ளும் முறை மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கேலி செய்வதாக அமைந்துள்ளதெனவும், உரிய வேளைக்கு தேர்தலை நடாத்தும் முயற்சிகளை குழப்பியடிக்கும் செயற்பாடுகளால் நாட்டு நிலவரங்களைத் தெரிந்து கொள்ளும் மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும் புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த சில தினங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள ஏட்டிக்குப்போட்டியான கருத்தாடல்கள்,ஊடக அறிக்கைகள் என்பன அரச இயந்திரத்தை சீரழிக்கிறதா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ள நிலையிலேயே, புத்திஜீவிகளும் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

மக்களுக்கு வாக்குறுதியளித்ததன் பிரகாரம் இவ்வருட காலாண்டுக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருகிறது.இதற்கிணங்க இம்மாதம் 18 முதல் 21 வரை வேட்புமனுக்கள் கோரப்பட்டு,தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.நாட்டின் வரலாற்றில் சபைகளைக் கலைப்பதற்கு முன்னர், வேட்புமனுக்கள் கோரப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாக உள்ளது.இதனால்,தேர்தல் நடைபெறுமா என்ற ஐயமும் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது. மட்டுமல்லாது நடாத்துமாறு ஒரு தரப்பும்,நடத்தக் கூடாதென இன்னொரு தரப்பும் வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளன.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் ஆணைக்குழுக்களுக்கு அளித்துள்ள அதிகபட்ச அதிகாரங்களைக் கொண்டு தேர்தல் ஆணைக்குழு சுயமாக இயங்கும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால்,சிலரால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தேர்தல் ஆணைக்குழுவை அரசாங்கத்தின் கைப்பிள்ளையாக மாற்றியுள்ளதையே அவதானிக்க முடிகிறது. ஆணைக்குழுவில்கூட இரட்டை நிலைப்பாடுகள் ஏற்படுமளவுக்கு நிலைமைகள் கேலிக் கூத்தாகியுள்ளன. ஜனநாயகம், மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குரிமை,தகவல் அறியும் உரிமை உள்ளிட்டவற்றில் நம்பிக்கையிழக்குமளவுக்கு இன்றைய நிலவரங்கள் இருப்பது,நாட்டின் கீர்த்தியை மழுங்கடிக்கும் எனவும் சிலர் கவலைப்படுகின்றனர். எனவே,அரசாங்கமென்ற வகையில் மக்களைத் தெளிவுபடுத்தும் பொறுப்பிலிருந்து விலகாமல்,தேர்தல்கள் குறித்த நிலைப்பாட்டை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

உள்ளூராட்சி தேர்தலில் ஏற்படப்போகும் சரிவு,எதிர்வரும் தேர்தல்களிலும் தாக்கல் செலுத்தும் என்ற அச்சத்தினால்தான், அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சுவதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.இது, அரசாங்கத்தின் தடுமாற்றங்களிலிருந்து தெரிய வருகிறது.இந்தத் தடுமாற்றத்தை,மக்கள் புரிந்து கொள்வதும் அரசாங்கத்தின் செல்வாக்கை பாதிக்கும். இதை அரசாங்கம் தெரிந்து கொள்வதும் அவசியம்.ஒருவேளை,தேர்தலை நடாத்த ஒத்துழைத்து, சரிவுகளை அடையாளம் காண்பதற்கான ஒத்திகைக்காகவும் தேர்தல் நடாத்தப்படலாம்.

வேட்பு மனுக்கள் கோரப்பட்டதிலிருந்து நிலவும் மயான அமைதி,ஒரு புயலைக் கிளப்பிவிடப்போகிறது. அது,தேர்தலா அல்லது இல்லையா என்பதாகவே இருக்கும். தேர்தலில்லை என்றால்,ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டதன் பிரகாரம், இவ்வருடம் பெப்ரவரி வரை சபைகள் இயங்கி, சுயமாகக் கலைந்து விடும்.இவ்வாறு கலையும் சபைகளுக்கு எப்போது தேர்தல்.? எதுவானாலும்,உண்மையான தகவலை மக்களுக்கு வழங்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகக்கூடாது. இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

## தமிழ்க்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

எடுக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிக விரைவில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஒரு வார காலத்தில் இது குறித்து கூட்டமைப்பின் தலைமை பதிலளிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகளின் தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில்லை எனக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களால் ஏகோபித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அவர்களது காலத்திலும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எனவே தொடர்ந்தும் கூட்டமைப்பைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்றும் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

**வாசகர்களே!**

இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

editor@newsplus.lk

## சம்மாந்துறைக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அவர் அக் கருத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"கடந்த 2013 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சம்மாந்துறைத் தொகுதிக்கான அமைப்பாளராகவும், சம்மாந்துறைப் பிரதேச சபையின் தவிசாளராகவும் பதவிவகித்த ஏ.எம்.எம்.நௌசாட் எந்தவொரு சம்மாந்துறை மகனிடமும் கலந்தாலோசிக்காமல் தனி ஒருவராக இருந்து சம்மாந்துறைக்கான வட்டார வரைபை முட்டாள்தனமாகவும் துரோகத்தனமாகவும் வடிவமைத்து சட்டமாக்கிய கதை யாவரும் அறிந்ததே.

அவ்வாறே அதனைச் சரிசெய்ய எடுத்த எமது அனைத்து முயற்சிகளையும் ஐ.ம.சு.முன்னணியின் அமைப்பாளர் பதவியைப் பயன்படுத்தி முறியடித்த கதையும் வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வாறு எமது மண்ணை குறுட்டுத் தனமாக தாரைவார்த்த இவ் வரலாற்றுத் துரோகத்தில் இருந்து மீள்வதற்கு வாய்ப்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த எமக்கு அண்மையில் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த முற்சித்த எம் போன்றோர்களை ஒன்றுகூட்டி ஒருமித்த அமைப்பிலே அதற்கான பிரேரணையை வடிவமைக்க எமது நம்பிக்கையாளர் சபை எடுத்த நடவடிக்கையின் பிரகாரம் ஏகோபித்த முறையில் வரையப்பட்ட பிரேரணைகளை சரிபார்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட 2வது கூட்டம் கடந்த 2022.11.21 ஆம் திகதி சம்மாந்துறை பெரிய ஜும்மா பள்ளிவாசல் காரியாலயத்தில், நம்பிக்கையாளர் சபைத் தலைவர் மௌலவி றம்ஷின் காரியப்பர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்திற்கு மாத்திரமன்றி அதற்கு முன்னரான முதலாவது கூட்டத்திற்கும் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌசாட் அழைக்கப்பட்டிருந்தபோதும் அவர் இரண்டு கூட்டங்களையுமே நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது போதாதென்று ஊரையும் ஊரின் நம்பிக்கையாளர் சபை மற்றும் புத்திஜீவிகளையும் உதாசீனம் செய்து, பிரதேச சபை உறுப்பினர்களை பிழையாக வழிநடாத்தி மீண்டுமொரு காட்டிக் கொடுப்பைச் செய்துள்ளார் இந்த தவிசாளர்.

இதனை முறியடித்து சகோதர தமிழ் சமூகத்திற்கு உரித்தான சரியான பங்கையும் வழங்கி, மிகச்சரியான எமது பிரேரணையை வென்றெடுக்கும் எமது முயற்சி வெற்றிபெற பிராத்தியுங்கள்.

## இந்தியா...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஜனவரி 12, 13ஆம் திகதிகளில் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

அண்டைய நாடுகளின் தலைவர்களை தவிர, ஆபிரிக்கா அங்கோலா, கானா, நைஜீரியா, மொசாம்பிக், செனகல், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், உஸ்பெகிஸ்தான், மங்கோலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

அமைச்சர்கள் அமர்வுகள் நிதி, சுற்றுச்சூழல், வெளியுறவு, எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் வர்த்தக நிலைகளில் 'உலகளாவிய தெற்கின் குரல்' மாநாடு நடைபெறவுள்ளது.

நான்கு அமர்வுகள் ஜனவரி 12ஆம் திகதியும், ஆறு அமர்வுகள் ஜனவரி 13ஆம் திகதியும் நடைபெறும். மொத்தத்தில் இந்த மாநாட்டுக்காக 120 நாடுகளுக்கு டில்லி, அழைப்புவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பௌத்தர்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சேபால அமரசிங்க, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பௌத்தர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பொதுஹரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள போலி தலதா மாளிகை தொடர்பாக கடந்த 05ஆம் திகதி பாராளுமன்றம் கூடியபோது ஆளும், எதிர்க்கட்சித் தரப்பு உறுப்பினர்கள் பேசியதோடு, உடன் அதனை தடை செய்யுமாறு மகாநாயக்க தேரர்களும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர்.

இதன்படி யூடியூப் செயற்பாட்டாளர் சேபால அமரசிங்க அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் போலி தலதா மாளிகை தொடர்பாக மகாநாயக்கத் தேரர்களும் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

சவூதி அரேபியாவின் இளவரசரும், பிரதமருமான சல்மான் அல் சௌந் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகளில் பாங்கைத் தொடர்ந்து இடம்பெறும் ஓதல்களுக்கு ஒலிபெருக்கிகளை பயன்படுத்தக்கூடாதென சில வாரங்களுக்கு முன் கோரிக்கை விடுத்திருந்தார்.

சேபால இதனை ஆதாரம் காட்டி இலங்கையில் பள்ளிவாசல்களில் பாங்கு ஒலிபெருக்கிகளில் ஒலிபரப்புவதை உடனடியாகத் தடை செய்யவேண்டுமென கேட்டிருந்தார்.

அந்த வேண்டுகோள் விடுத்து இரு வாரங்களுக்கு பின்பே போலி தலதா மாளிகைக்கு ஆதரவாக அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மூன்று முஸ்லிம் அதிகாரிகள் போட்டியிட்டிருந்தனர்.

அரநாயக்க பிரதேச செயலாளர் பைசல் ஆப்தீன், வெருகல் பிரதேச சபை செயலாளர் முஹம்மட் அனஸ், அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் முஹம்மட் சப்ராஸ் ஆகியோர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் ஆவர்.

இவர்களில் முதலாம் தர சேவை உத்தியோகத்தரும், சேவை அடிப்படையில் மூத்தவருமான பைசல் ஆப்டீன் முதலிடம் வகிக்கிறார்.

புத்தசாசன அமைச்சின் தகவல்களின் படி பைசலே பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் புதிய நியமனங்கள் வழங்குவதற்கு தடை செய்யப்பட்டிருப்பதனால் அநேகமாக தேர்தலின் பின்பே இந்த நியமனம் செய்யப்படலாம் என தெரிவிக்கின்றது.

இதேநேரம் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக கிறிஸ்தவ சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் திருமதி சதுரி பெர்னாண்டோ பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சமூக...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

சிங்கப்பூரிலுள்ள சட்டங்கள் பற்றி ஆராய்ந்து அவற்றை இலங்கையிலும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# ஓமான் பற்றிய ஆங்கில நூல் கொழும்பில் வெளியீடு



வெளிவிகார அமைச்சின் மேலதிக செயலாளர் அமீர் அஜ்வாத் எழுதிய ஓமான் பற்றிய ஆங்கில நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி லக்ஷ்மன் கதிர்காமர் கேட்போர் கூடத்தில் மாலை 4மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் கௌரவ அதிதியாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பால சூரியவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான செயலமர்வு

(ஏரூர் உமர் அறபாத் )

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் தகவல் அறியும் உரிமை சட்டத்தினைப் பயன்படுத்தி எவ்வாறு ஊழலற்ற சமுதாயத்தினை உருவாக்கலாம் மற்றும் உரிமைகளை பாதுகாக்கலாம் போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு

மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது...

மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பிலும், அந்த சட்டத்தை எவ்வாறு பயன்படுத்த



வேண்டும் என்பது தொடர்பிலும் விளக்கப்பட்டதுடன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பயன்கள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

இப்பயிற்சி செயலமர்வில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் "உபாலி அபேரத்ன" மற்றும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சட்டத்தரணி "கிஷாலி பின்டோ ஜயவர்தன", சட்டத்தரணி "ஜகத் லியன ஆராச்சி", "ஏ. மொஹமட் நஹியா" மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மேலதிக செயலாளர் "நவேஸ்வரன்" உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உயர்தரத்துக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை (7) குடுப்பத்துடன் கடற்கரைக்குச் சென்ற மாணவன் கடலில் குளிக்கும் போது அலையில் அகப்பட்டு மரணமடைந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்த மாணவன் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் உயர் தர கலைப் பிரிவில் கற்று வரும் மனாப்தீன் அப்துர் ர/ஹமான் என்பர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர், இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருந்த நிலையிலேயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த மாணவனின் தந்தை மூன்றரை வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் (6) கட்டாரிலிருந்து வீடு திரும்பியிருந்த நிலையில், குடும்ப சகிதம் சவுக்கடி கடற்கரைக்கு சென்ற போதுதான் இவ் அனர்த்தம் இடம்பெற்றிருக்கிறது.

மரணமடைந்தவருடன் நீராடிய அவரது சகோதரர் ஒருவர் கடல் அலையில் சிக்கி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மரணமடைந்த மாணவனின் மரண விசாரணைகளை ஏறாவூர் பொலிஸாருடன் சென்ற மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் விசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## குமார்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

நிறுவனத்தின் தலைவரும், இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் தலைவருமான குமார் நடேசனுக்கு "பிராவாசி" என்ற பாரத விருது கிடைத்துள்ளது.

இந்தியாவின் உயர் விருதான இந்த விருது கிடைக்கும் இரண்டாவது நபர் இவராவார்.

2012 ஆம் ஆண்டு மனோ செல்வநாதனுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஜனவரி 08 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை இந்திய ஜனாதிபதி டவ்பதி முருமூவின் தலைமையில் நடைபெறும் பெருவிழாவின் போது இந்த விருதை வழங்குவதாக இந்திய உயஸ்தானிகர் ஆலயம் தெரிவித்தது.

இந்த விருதைப் பெறுவதற்காக குமார் நடேசன் தற்போது இந்தியா சென்றுள்ளார்.

அவர் எதிர்வரும் 12ஆம் திகதி இந்திய ஜனாதிபதி டவ்பதி முருமூவினமிருந்து இந்த விருதைப் பெற்றுக் கொள்வார்.

## யாழ்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

பொருட் கப்பல் சேவையொன்று பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் அரம்பிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வாரத்திலும் பிரதி வெள்ளிக்கிழமை நாட்களில் இந்தக் கப்பல் சேவை இயங்கும்.

காங்கேசன்துறையிலிருந்து இந்த கப்பல் சேவை தமிழ்நாடு செல்லும்.

300 மெறிந்தக் கப்பல் சேவை இயங்க ஆரம்பித்தால் பொருட்களின் விலை குறையுமென யாழ்ப்பாண வணிக கழகத் தலைவர் டி.ஜயசேகரன் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இந்திய சந்தையிலுள்ள விலைக்கு பொருட்களை இலங்கையில் விற்க முடியுமென்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.






# அரங்கம்

## சம்பந்தனும், மஹிந்தவும் சந்தித்து பேசியது என்ன?

### சம்பந்தனும், மஹிந்தவும் சந்தித்து பேசியது என்ன?

மார்ச் மாதம் நடைபெறவிருப்பதாகக் கூறப்படும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரியதையடுத்து இவ்வாரம் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது.

தேர்தலை நடாத்தக்கூடிய சூழல் நாட்டில் இல்லையென ஆளும் கட்சித் தரப்பினர் துரிதமாக பிரசாரம் செய்து வருகின்ற அதேவேளை, எதிர்க்கட்சித் தரப்பினர் தேர்தலை நடாத்துவதற்கு நிதி தடையல்லவென்றும், ஆளும் கட்சியினர் தோல்விக்கு அஞ்சியே இவ்வாறு சாக்குப் போக்குகளை கூறி வருவதாகவும் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தலை நடாத்தக்கூடாதென ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயற்பட்ட இராணுவ அதிகாரியொருவர் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பின்னணியில் பொதுஜன பெரமுன முதன்முறையாக களுத்துறையில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தலைமையில் மொட்டுக் கட்சி ஆதரவாளர்கள் அறிவிப்பு விடுத்த அடுத்த நாளே களுத்துறை கச்சேரியில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

தேர்தலை நடாத்தக்கூடிய சூழல் நாட்டில் இல்லையென மக்களை உணர்த்துவதற்கு ஆளும் தரப்பினர் ஊடகங்களைப் பயன்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனவரி இரண்டாம் திகதி வருடத்தின் முதல் நாள் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். எட்டுமணி நேர வேலை ஐந்து நாள் கடமை என்ற மனோபாவத்திலிருந்து மீளுங்கள் என ஜனாதிபதி தனது அலுவலகத்தில் புணிபுரியும் ஊழியர்களை விளித்து உரையாற்றும் போது வழங்கிய புத்திமதி இதுவாகும்.

புதுவருடத்தின் முதலாம் நாள் ஞாயிறு தினமாகையால் அரச, தனியார் துறை ஊழியர்கள் கடமைக்கு வருகை தந்தது ஜனவரி இரண்டாம் திகதி திங்கட்கிழமையாகும்.

ஜனாதிபதி செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி ஜனாதிபதி ஊழியர்களை விளித்து உரையாற்றியது ஜனாதிபதி அலுவலகத்தில் படிக்கட்டிலிருந்தாகும்.

ஐந்து மாதங்களுக்கு முன் அரகலயக்காரர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து ஜனாதிபதி உரையாற்றினார்.

சிறிது நேரம் உரையாற்றிய பின் தனது அலுவலகத்திற்குச் சென்று கடமைகளை ஆரம்பித்தார். சம்பிரதாயபூர்வமாக இரண்டு இடங்களில் ஊழியர்களுக்காக உணவு மேசைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ரா பெரேரா, "சேர் புத்தாண்டு மேசையை திறந்து வைப்பதற்காக அங்கே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என அறிவித்ததும் ஜனாதிபதி அங்கே சென்றார். ஜனாதிபதி அலுவலகத்திற்கு அன்று திறந்த அழைப்பில் அநேகர் வருகை தந்திருந்தனர்.

ஜனாதிபதிக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காகவே அவர்கள் அவ்வாறு வருகை தந்தார்கள். ஜனாதிபதி அலுவலக சிற்றுண்டிச்சாலையில் தயாரிக்கப்பட்டிருந்த உணவு மேசையைத் திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி சென்றதோடு, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஊழியர்களுக்காக கட்டடத்திற்கு வெளியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிற்றூண்டி மேசையைத் திறந்து வைத்தார்.

நீண்டகாலத்துக்குப் பிறகு ஜனாதிபதி ஒருவர் எங்களோடு சேர்ந்து உண்ணுகிறார் என அங்கிருந்த ஒரு பழைய ஊழியர் மற்றொரு ஊழியருக்கு சொல்வதைக் கேட்கக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதியின் செயலாளர் ஊழியர்களுடன் சேர்ந்து உணவுண்டபின் அதிதிகள் இருக்கும் இடத்துக்குச் சென்றார். அங்கு அப்போது வருகை தந்திருந்தவர்கள் உணவு உண்டவண்ணமிருந்தனர். ஜனாதிபதி ரணில் அமர்ந்திருந்த மேசையைச் சுற்றி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பணியகப் பிரதானி சாகல ரத்நாயக்க, தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சிந்தக கருணாரத்ன ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

இவர்கள் நாட்டு நடப்புக்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது ஊழியர்களும், வருகை தந்த பிரமுகர்களும் ஜனாதிபதிக்கு வாழ்த்துக்ளை தெரிவித்துக் கொண்டனர். ஒரு குழுவினர் ஜனாதிபதியுடன் புகைப்படமெடுத்ததோடு, மற்றொரு குழுவினர் ஜனாதிபதியுடன் செல்பி படமும் எடுத்தனர். ஜனாதிபதி அங்கு ஊழியர்களோடு உரையாடிவிட்டு தனது அலுவலக அறைக்குச் சென்று பணிகளில் ஈடுபடத் தயாரானார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு வாழ்த்துக் தெரிவிப்பதற்கு அங்கு வருகை தந்திருந்தனர்.

### தான் விரும்பும் நாடு இலங்கை என்கிறார் கெமரூன்

அன்று மாலை ஜனாதிபதியின் பழைய வெளிநாட்டு நண்பரொருவர் ஜனாதிபதியைச் சந்திக்க வந்திருந்தார். தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்த முன்னாள் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூனை ஜனாதிபதி குதூகலமாக வரவேற்றார்.

ஜனாதிபதி முதலில் அவருடன் இலங்கையில் விடுமுறையைக் களித்தது பற்றி விசாரித்தார். "நான் மிகவும் விரும்பும் ஒரு நாடு இலங்கை. எனது விடுமுறையை எனது குடும்பத்துடன் மிகவும் சந்தோசமாக களித்தேன்" எனப் பதிலளித்தார். கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த சாகல ரத்நாயக்க நாட்டை மீட்டெடுப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி விபரித்தார். நாட்டை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் ரணிலுக்கு கெமரூன் பாராட்டுத் தெரிவித்தார். தன்னால் இந்த அழகான தீவுக்கு என்ன நடக்கவேண்டுமென கெமரூன் ஜனாதிபதியிடம் கேட்டார். ஜனாதிபதி சர்வதேச வர்த்தகம் மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் தொடர்பாக விளக்கமளித்தார்.

கொழும்பு துறைமுக நகரை பார்வையிடச் சென்ற கெமரூன் அதுபற்றியும் திருப்தி தெரிவித்துப் பேசியதோடு, கடனை மறுசீரமைப்பதற்கு தன்னால் முடியுமான எல்லாவற்றையும் செய்வதாக கெமரூன் வாக்குறுதியளித்தார். நாட்டில் நல்லிணக்கத்தை மேம்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

### புத்தாண்டின் முதலாவது அமைச்சரவை கூட்டம்

புத்தாண்டின் முதலாவது அமைச்சரவை கூட்டம் திங்களன்று மாலை நடைபெற்றது. பல விடயங்கள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டன. மின்சக்தி எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தான் எற்கனவே அறிவித்திருந்த படி மின்கட்டண அதிகரிப்பு பிரேணையை இன்று சமர்ப்பிப்பது இல்லையெனத் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்புப் பிரதானிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். நாட்டின் பாதுகாப்பு மற்றும் போதைவஸ்து ஒழிப்பு தொடர்பாக இங்கு விஷேடமாக கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட போதைவஸ்து ஒழிப்பு செயலணி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி ரணில் கொழும்பிலிருக்கின்ற கத்தோலிக்க தூதுவர் ஆலயத்துக்குச் சென்று காலஞ்சென்ற பாப் ஆண்டவர் 16ஆவது பெனடிக்கின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அனுதாப புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

இந்த ஆண்டில் எந்தவொரு அரச அலுவலகங்களும் போனஸ் வழங்கக் கூடாதென அறிவித்திருந்தும் மூன்று நிறுவனங்கள் போனஸ் வழங்கியமை தொடர்பில் ஜனாதிபதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை, ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியன போனஸ் வழங்கியிருப்பதாக தெரியவந்தது. இதுபற்றி உடனடியாக தேடிப்பார்க்குமாறு தனது செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மின்சார சபையில் போனஸ் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும், மற்ற இரு நிறுவனங்களிலும் போனஸ் வழங்கப்பட்டிருப்பது பற்றியும் செயலாளர் ஜனாதிபதிக்கு அறிவித்தார். ஏனைய இரு நிறுவனங்களின் தலைவர்களிடமும் இதற்கு விளக்கம் அளிக்குமாறு ஜனாதிபதி செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார். ஊடகங்களில் அச்செய்திக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிச் செயலாளர் தலைமையிலான தூதுக்குழுவொன்று புதனன்று ஜனாதிபதியை சந்தித்தது. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசியல் நடவடிக்கைகள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது. நாட்டின் எதிர்காலத்தை முன்னிட்டு கடினமான தீர்மானங்கள் எடுக்கவேண்டியது குறித்து பிரதிச் செயலாளர் பெண்மணி கருத்துத் தெரிவித்தார். இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே மற்றும் இந்திய பொருளாதார வணிக முதலாம் செயலாளர் ஜனாதிபதியை சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடினார். இந்திய அரசு இலங்கையில் பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கு சகல உதவிகளையும் வழங்குவதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

### ஐ.தே.க. முகாமைத்துவ சபை

புதனன்று மாலை ஐ.தே.க. முகாமைத்துவ சபை கூடியது. அப்போது கட்சித் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எதிர்கால தேர்தல் நடவடிக்கைகள் பற்றி விளக்கம் கோரினார். அப்போது பதிலளித்த ஜனாதிபதி, "தேர்தல் ஆணைக்குழுவின் முடிவை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்" எனக் குறிப்பிட்டார். தேர்தல் தொடர்பில் ஏனைய நடவடிக்கைகளை ஜனாதிபதியின் தலைமையில் முன்னெடுப்போமென கட்சியின் நிர்வாகப் பிரதானி சமல் தெரிவித்த போது, ஜனாதிபதியிடமிருந்து எவரும் எதிர்பாராத பதிலே கிடைத்தது.

நான் இந்தத் தேர்தலில் சம்பந்தப்படப் போவதில்லை. கட்சியில் போட்டியிடுவோரை அங்கீகரிப்போர் கூட்டத்திற்கு மட்டும் நான் தலைமை தாங்குவேன். எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெடுப்புவதற்கான ஆணையே எனக்குக் கிடைத்திருக்கிறது. நீங்கள் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் பிரிந்திருக்கிறார்கள் என்றொரு கதை உலாவுகிறது. தவிசாளர் தன் தனி விருப்பத்திற்கு ஏற்றவாறு செயற்படுகிறார் என வஜிர தெரிவித்தார். எனக்கும் அந்த தகவல் கிடைத்திருக்கிறது. சட்டமா அதிபருடன் பேசி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் பிரதமருக்குக் கூறினேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இப்போது நாங்கள் மீண்டும் 8000 பேருக்கு கொடுப்பனவு வழங்க வேண்டியிருப்பதாக சாகல ரத்நாயக்க தெரிவித்தார். திறைசேரியில் பணம் இல்லை. இப்போது இருக்கும் பணத்தை பார்க்கும்போது நான்காயிரம் பேருக்கே கொடுப்பனவை வழங்க முடியும். நான்காயிரம் உறுப்பினர் ஒரு வருடத்திற்கு சம்பளம் எடுத்து வேலை செய்யட்டும். அடுத்த நான்காயிரம் பேரும் அடுத்த வருடம் சம்பளம் எடுத்து வேலை செய்யட்டும் என வஜிர கூறியபோது எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

இதேநேரம் தேர்தல் தொடர்பாக நியமனப் பத்திரம் கோரும் வர்த்தமானி அறிவித்தல் அங்கத்தவர்களின் கையொப்பமின்றி வெளிவந்திருக்கும் தகவலும் ஜனாதிபதியின் கவனத்துக்கு எட்டியது.

ஜனாதிபதி வியாழக்கிழமை முழு நாளும் நிதியமைச்சிலிருந்து அலுவல்களை ஆரம்பித்தார். இளைஞர் விவகாரப் பணிப்பாளர் நாயகம் ரந்துல அபேவீரவை அழைத்த ஜனாதிபதி 75 ஆவது சுதந்திர தினத்துக்கு சமாந்தரமாக அமைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர் அணிக்கு உனடியாக விண்ணப்பங்களைக் கோருமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி ரந்துல பல குழுக்களுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

ஐ.தேக. தலைமையகமான ஸ்ரீகொதவில் ஜனவரி முதலாம் திகதி பால் பொங்கி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அடுத்த தினம் தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்வதற்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, உப தலைவர் அகில காரியவசம், கட்சித் தவிசாளர் வஜிர, பொதுச் செயலாளர் ரங்கே பண்டார, நவின் திசாநாயக்க, கொழும்பு முகாமையாளர் லசந்த குணவர்தன ஆகியோர் நேர்முகப் பரீட்சையை நடத்தினர்.

### மஹிந்த சம்பந்தனை சந்தித்தது ஏன்?

இவ்வாரத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்தமையாகும்.

இரு மூத்த தலைவர்களும் பொது விடயங்கள், இனப்பிரச்சினைக்குத் தீர்வு சம்பந்தமாக இதன்போது கலந்துரையாடினர். தமிழ் அரசியல் தலைவர்களில் மூத்த தலைவராக இருக்கும் சம்பந்தன் பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆண்டு இருப்பவராவார். 90 வயதுடைய சம்பந்தனை 77 வயதுடைய மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தன் தங்கியிருக்கும் இல்லத்தில் சந்தித்து உரையாடினார். சம்பந்தனுடைய மகள் கிரிஷாந்தினி தந்தையுடனிருந்து மஹிந்தவுக்கு கோபி கொடுத்து வரவேற்றார்.

அரசாங்கத்துக்கும், தமிழ் தரப்புக்குமிடையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் உத்தியோகபற்றற்ற முறையிலும், உத்தியோகபூர்வ முறையிலும் நடைபெற்று வருகின்ற நிலையிலேயே இந்த சந்திப்பு கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

சம்பந்தன் சற்று சுகவீனமுற்றிருந்த நிலையிலும் மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்று உரையாடினார். இந்த சந்திப்பு தொடர்பாக ஊடகங்கள் மஹிந்த ராபக்ஷ விடம் கேட்டபோது, "இதுவொரு மரியாதைக்குரிய சந்திப்பு என்றும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எமது கட்சியின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் கோரினால் வழங்கத் தயாராக இருப்பதாகவும்" கூறினார்.

### நாங்கள் பிளவுபட்டில்லை தேர்தல் ஆணைக்குழு ரணிலிடம் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்குமா இல்லையா என்ற நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன் தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களை தனது அலுவலகத்துக்கு அழைத்துக் கலந்துரையாடினார்.

தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு பிரிந்து செயற்படுவதாக வதந்திகள் பரவியிருந்த நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பின் போது ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஆணைக்கழு அங்கத்தவர்களுக்கு ஒன்றுபட்ட முடிவை எடுக்குமாறு ஆலோசனை தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் டி புஞ்சிஹேவா உட்பட்ட அங்கத்தவர்கள் தேர்தல் தொடர்பாக எங்கள் மத்தியில் பிளவு இல்லையென்று வாதிட்டனர். அதற்காக வெளியிடப்பட்ட அறிவித்தல்களின் பிரதிகளையும் எடுத்து வந்திருந்தனர். ஐந்து அங்கத்தவர்களும் கையொப்பமிட்ட ஆவணங்களை ஜனாதிபதிக்கு காட்டினர். வெளியே நாங்கள் பிளவுபட்டிருந்தோம் என்ற வதந்தியில் உண்மையில்லை என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப்பை நடத்தியது சட்டவிரோதமானது என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டி வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இச்சந்திப்பு தேர்தல் சட்டத்திற்கு முரணானது எனத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தரப்பில் மற்றும் பலரும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தை மீறி செயற்பட்ட முதலாவது நபர் என்றும் தெரிவித்துள்ளனர்.

### துபாய்க்கு சுற்றுலாவுக்குச் சென்ற கோட்டா

எட்டு நாட்கள் துபாய் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபே ராஜபக்ஷ இரு தினங்களுக்கு முன்னர் நாடு திரும்பினார். கோட்டாபே ராஜபக்ஷ குடும்பத்துடன் அமெரிக்கா செல்லப் போகிறார் என ஊடகங்கள் தெரிவித்திருந்த போதிலும், அவர் எட்டு நாட்கள் துபாயில் உல்லாசம் களித்துவிட்டு தாயகம் திரும்பினார். இரட்டை பிரஜையாக இருந்த கோட்டாபே தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது பிரஜாவுரிமையை கைவிட்ட நிலையில் மீண்டும் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்கப் போவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கோட்டாவின் மனைவி உட்பட குடும்பத்தவர்கள் இன்னும் அமெரிக்கா பிரஜாவுரிமையை வைத்துள்ளனர்.

கோட்டா துபாயில் தந்தியிருக்கும்போது துபாயில் உள்ள முக்கியமான உல்லாச மையங்களுக்கு விஜயம் செய்தார். உல்லாச மையமொன்றில் வைத்து கோட்டாவை இலங்கையர்கள் சந்தித்தபோது புகைப்படமும் எடுத்துக் கொண்டுள்ளனர். கோட்டாபே ராஜபக்ஷ பற்றி ஆங்கில பத்திரிகையொன்று மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விடம் கேட்டபோது, கோட்டாபே ராஜபக்ஷவுக்கு அரசியல் அனுபவம் இல்லையென்றும், அவர் ஜனாதிபதியாக இருக்கும்போது அவருடைய விடயங்களில் தான் தலையிடவில்லையென்றும் தெரிவித்தார். அவர் ஒரு இராணுவ மனிதர். அவர் தானாக தீர்வுகளை எடுத்தார். அதனாலே அவரது வீழ்ச்சியும் ஏற்பட்டது. அவர் மற்றொரு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி ஜனாதிபதி அபேட்சகர் ஒருவரை நிறுத்துமென்றும் அதற்கு காலமிருப்பதனால் அது குறித்து இன்னும் நாம் கவனம் செலுத்தவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் என்ன எனக் கேட்டபோது, முழுக் கட்சிகளும் இதற்குப் பொறுப்பு, மக்கள் மத்தியில் ஒரு தவறான கருத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் தான் பொறுப்பு என்று கோட்டாபே ஜனாதிபதியாக இருக்கும்போது நான் எவ்வாறு பொறுப்புக்கூறலாம். நான் எந்தவொரு விடயத்திலும் தலையிடவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 JANUARY 08 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமா?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மார்ச்சில் நடைபெறுமா? இல்லையா என்ற கேள்வி எங்கும் பரவலாக எழுப்பப்படுகிறது.

கடந்த ஆண்டு அதாவது 2022 மார்ச்சில் புதிய உள்ளூராட்சி மன்றங்கள் பதவியை துறக்க வேண்டும். அன்றிருந்த சூழ்நிலை குறிப்பாக கொரோனா தொற்றினைக் காரணமாகக் காட்டி ஒரு வருட காலத்திற்கு தேர்தல் ஒத்திப் போடப்பட்டது.

அரசாங்கத்திற்கு விசேட சட்ட ஏற்பாடுகள் இல்லாமலே தேர்தலை ஒத்திப் போட முடியாது. அதன்படியே தேர்தல் ஆணைக்குழு நியமனப் பத்திரங்களைக் கோரியுள்ளது.

தேர்தலை ஒத்திப் போடுவதற்காக நாட்டில் போதிய நிதி இல்லை என்றே அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. விவசாய அமைச்சர் தேர்தலுக்கு வழங்கும் பணத்தை விளையும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் தருமாறு கேட்கிறார். ஐ.தே.க. தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜிர அபேவர்த்தன பணம் செலவு செய்வதற்கு ஆற்றல் இல்லாத நிலையில் தேர்தல் ஒன்றை நடாத்தக் கோருவது சர்வதேச சதி என்றும் எதிர் கட்சிகள் தேர்தலை நடாத்தக் கோருவது நாட்டினை மேலும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளுவது என்றும் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் மட்டுமன்றி, நிதி அமைச்சின் சில அதிகாரிகளும் நிதி வழங்க முடியாது என காரணிகளைக் கூறி வருகிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் வரவு – செலவுத்திட்டத்தின் அந்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கப்படுவது சம்பிரதாயமாகும். இதன்படி இவ்வாண்டு வரவு – செலவுத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கடந்த வாரத்தில் தனது அதிகாரிகளுடன் பேசும் போது தெரிவித்திருப்பதனை நியூஸ் ப்ளஸின் கடந்த வார அரங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

நாட்டில் பணம் இல்லை எனக் கூறி தேர்தல்களை ஒத்திப் போடுவதற்கே அரசு தயாராகி வருகிறது. இது ஒரு தவறான முன்னுதாரணமாக அமையலாம். இவ்வாறு முன்னுதாரணம் ஒன்று உருவாகினால் எதிர்காலத்தில் இதனை முன்னுதாரணமாக எடுக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது. இந்தப் பயங்கர முன்னுதாரணத்திற்கு இடமளிப்பது ஆபத்தாகவே அமையலாம்.

தேர்தல்களுக்கு முழுமையாக நிதி ஒதுக்கப்பட்டாலும் வழமையாக கைக்காசுக்கு தேர்தல் நடத்தப்படுவதில்லை. ஏற்படும் செலவுகளுக்கு படிப்படியாகவே பணம் செலுத்தப்படுகிறது. எனவே, தேர்தலை உரிய நேரத்தில் நடாத்தி, மக்களுக்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

தேர்தல் நடைபெறும் இவ்வாண்டு இலங்கை அரசியலில் முக்கியமானது.

நாட்டில் "முறைமை மாற்றம் வேண்டும்" என நடந்த அரகலய போராட்டத்தின் பின்பே நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும். இந்தத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் அந்த முறைமை மாற்றத்திற்கு அநுகூலமாக இருப்பவர்களாக இருக்க வேண்டும். எனவே, அரசியல் கட்சிகள் முறைமை மாற்றத்திற்கு பொறுத்தமான அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்த வேண்டும். அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும். முறைமை மாற்றத்தை முன்னெடுக்கக் கூடிய வேட்பாளர்களை நிறுத்துவதற்கு அக்கறை காட்ட வேண்டும்.

சிறந்த சேவை புரியக்கூடிய, அரசியலை வியாபாரமாக மாற்றாதவர்களையே தமது கட்சிகளின் அபேட்சகர்களாக நிறுத்துவதற்கு அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் இத்தேர்தலில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

# தமிழரசு, ரெலோ, புளொட் தனித் தனியாகப் போட்டி!

- பரப்புரை மேடையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசக் கூடாது
- தேர்தலின் பின் சபையில் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டும்

- மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் தமிழரசு யோசனை
- கூட்டமைப்பின் பங்காளிகளுடன் பேசி இறுதி முடிவு

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியன தனித்தனியாகத் தங்களது சொந்தக் கட்சியின் சின்னங்களிலேயே போட்டியிட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்களால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது என்று கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் எம்.பி. பா.அரியநேத்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

ஆயினும் இந்த யோசனை தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய தலைவர்களுடன் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை (10 ஆம் திகதி) நடைபெறவுள்ள கூட்டத்தில் பேசியே இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், தவராசா கலையரசன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், எஸ். யோகேஸ்வரன் உட்பட மத்திய செயற்குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர். நாடாளுமன்ற



உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தே இந்தக் கூட்டத்தில் அதிகம் பேசப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியன தனித்தனியே தங்களது சொந்தக் கட்சியின் சின்னங்களிலேயே போட்டியிடுவது என்றும், ஆயினும் தேர்தல் பிரசாரத்தில் மூன்று கட்சிகளும் ஒரே மேடையில் பிரசாரத்தில் ஈடுபடுவது என்றும், இதன்போது ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொள்வதில்லை என்றும், மூவரில் யாருக்காவது வாக்களிக்கலாம் என்றே கோருவது என்றும், இதன் ஊடாக தற்போதைய தேர்தல் முறைமையில் கூடிய ஆசனங்களை மூன்று கட்சிகளும் கைப்பற்றி மூன்று தரப்பும் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர்.

ஆயினும் இந்த யோசனை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா. சம்பந்தனுடனும், நாளைமறுதினம் (10) நடைபெறவுள்ள கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்திலும் பேசியே இறுதித் தீர்மானத்தை எட்டுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

# பம்பலபிட்டி அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா 2022










பம்பலபிட்டி அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா அண்மையில் (29) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் S.J.யோகராஜா(PhD) (மொழியியல் துறை ,களனி பல்கலைக்கழகத்தின்முன்னாள் தலைவரும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பதில் தலைவரும் )

சிறப்பு விருந்தினர்களாக
Dr.ஹல்ஹாரி நெத்ராஞ்ஞனி பிட்டிகல (PhD) மூத்த விரிவுரையாளர்ரூஆய்வுத்துறை மேற்பார்வையாளர முயுயுவுளுரு International University
Dr.Sir W.A. தேசபிரிய சாம் விஜெயதுங்க(சமாதான தூதுவர் Director General-SUNFO Global Federation)
Dr.T விமலன்(கவுன்சில் உறுபினர் யாழ் பல்கலைகழகம்
Mr. R. உதயகுமார் மாகாணப் பணிப்பாளர்,கல்வி பணிமனை கொழும்பு
Mr.றுசைட் கபீப்(MBA)
Mr. S.முரளிதரன்(SLEAS)
Mr. ஆதம் மெத்வேதிவ் (University of Ukraine-Ukraine
Ms. இர்யான குஷ்னரோவா (University of Ukrain-Ukraine-Consultant - amazon College)
Ms. நடாலியா மொரசோவா (Financial Consultant-Russia Consultant-amazon College)

மேலும் அமேசன் கல்லூரியின் டிப்லோமா,பட்டதாரி மாணவர்களின் பட்டமளிப்புடன் விரிவுரையாளர்களுக்கும்,பங்குதார நிறுவனங்களுக்கும்,அமேசன் கல்லூரியின் ஊழியர்களுக்கும் விசேட நினைவுச்சின்னம் அமேசன் உயர்கள்வி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திரு இல்ஹாம் மரைகாரினால் வழங்கி வைக்கபட்டது இப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 220 மாணவர்கள் பட்டத்தை பெற்றுக்கொண்டனர். இதில் ஆசிரியர் பயிற்சி நெறி,உளவியலும் உளவளத்துனணயும்,தகவல் தொழிநுட்பம்,கணக்கியல் போன்ற பல துறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. வெறும் புத்தக கல்வியை மட்டும் மையமாக கொள்ளாமல்,மாணவர்களுகிடையே சுயவேலைத்திட்டங்கள்,(Individual Project) பயிற்சி பட்டறைகள்(ீசயஉவைையட றுழசமளாழிள),வெளிநாட்டு மாணவர்களின் தொடர்பாடல்(குழசநபைெ ளுவரனநவெள நஒஉாயபெந),பல உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை கைசாத்திட்டு மாணவர்களுக்கு ஐனெைைனரயட வுசயனைெபை போன்றவற்றை வழங்கி தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மாணவர்களை தயார்படுத்தி அனுப்புகின்றமை விசேட அம்சமாகும். எதிர்வரும் ஆண்டுகளில் உலகிலேயே அதிகமாக தேவைபடுகின்ற தொழிற்துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளையும் வெகுவிரைவில் ஆரம்பிக்கபடவுள்ளதாக அமேசன் உயர்கல்வி பணிப்பாளர் திரு இல்ஹாம் மரிக்கார் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார் இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும்.

எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப் படுகின்றான். இதற்க்கு காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்க ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்க்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும். இப்படிப்பட்ட மகோன்னத துரையை தெரிவு செய்தமையும் இதனாலேயாகும்.அதாலேயேதான் இன்னும் கற்றுக்கொண்டிருப்பதாக தனது உரையில் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட துறைக்கு பணியாற்றுவது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் ஒவ்வரு வீட்டிலும் பல கல்விமான்கள் “ பட்டதாரிகளை உருவாக்குவது தனது தூரநோக்கு திட்டமெனவும் தெரிவித்தார்.

அமேசன் உயர் கல்வி நிறுவனமானது கல்வியோடு மட்டுமன்றி பல சமூக சேவைகளையும்,பல இலவச புலமைபரிசில் திட்டங்களையும் செய்து வருகின்றமை குறிப்பிடதக்கது. அமேசன் உயர்கல்வி நிறவனமானது தொழில் திறன் அபிவிருத்தி அமைச்சின் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனத்தினால் (P01/0854) பதியப்பட்ட உயர்கல்வி நிறுவனமாகும்.மேலும் பல உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புக்களுடனும்,பல்கலைக்கழகங்களுடனும் இனணந்து செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடதக்கது. இவர்களின் அனைத்து பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும் (UGC Recognized )

விசேடமான பாடநெறிகளாவன
Diploma/HND/BA In Teacher Training
Diploma/HND/BA/BED/ In Montessori & Child Care Education
Diploma/HND/BA/BSc In psychology& counselling
Diploma/HND/BA In Child Psychology
Diploma/HND/BA In Business Management
Diploma/HND/BA In English language
Diploma In Childcare
Diploma/HND/BA In Hotel Management

பிரதம அதீதி பேராசிரியர் S.J யோகராஜா தனது விசேட உரையில் கல்வி என்பது இக்கால கட்டத்தில் இலகுவாக வும் இலவசமாகவும் பெற்றுக்கொள்ள கூடிய ஒன்றாகவுள்ளது என்றும் அதற்காக நாம் காலங்களும் நேரங்களையும் ஒதுக்கி பல தியாகங்களை செய்வதன் மூலமமாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எத்தகைய சவால்கள் எதிர்காலத்தில் வந்த போதிலும் நாம் பெற்ற கல்வியின் மூலமாக சிறந்த தீர்வினை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் எடுத்துரைத்தார்.

# தேசிய பாடசாலைகளாக பிரகரணப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பாடசாலைகள் மீண்டும் தேசிய பாடசாலையாக பிரகணப்படுத்தப்படுமா?

## பாராளுமன்றில் இம்ரான் எம்.பி. கேள்வி

(எஸ்.அஷ்ரப்கான்)

ஆயிரம் தேசிய பாடசாலை எனும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளை தெரிவுசெய்கின்ற சந்தர்ப்பத்தில் தகுதியான பாடசாலைகள் உள்வாங்கப்படாமல் தகுதியற்ற பாடசாலைகள் சில உள்வாங்கப்பட்டுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக



வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகள் உருவாக்குகின்ற திட்டங்கள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் தகுதியில்லாத பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளது ஏன்? இவ்வாறான நிலைக்கு காரணம் என்ன? இதில் அரசியல் கலக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் கல்வி மட்டங்களில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சில பாடசாலைகளுக்கு இலட்சக்கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை தேசிய பாடசாலையாக பிரகரணப்படுத்தப்பட்ட போதிலும் அவை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. எனவே இந்தப் பாடசாலைகள் தெரிவு செய்யப்படுகின்ற விடயம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமா? அல்லது இடைநிறுத்தப்படுமா? என்று கல்வி அமைச்சரிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது, நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது, பொருத்தமற்ற பாடசாலைகள் பெயரிடப்பட்டுள்ளன, தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம் என பதிலளித்தார்.







ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் மூன்று நாட்கள் இலங்கை வருகை தந்துள்ளர் இவர் நாட்டின் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள் அரசாங்கம் மேற்கொள்ளும் பொருளாதர மேம்பாட்டுத் திட்டங்கள். . காலநிலை மாற்றம் பற்றி பிரதம மந்திரி தினேஸ்குணவர்த்தன வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகியோர்களை சந்தித்து கலந்துரையாடினார். (அஷ்ரப் ஏ சமத்)



சென்னை 46.வது புத்தகக் கண்காட்சியில்முதல் நாள் நிகழ்ச்சியில் டாக்டர்.எஸ்.முருகுசுந்தரத்தின்," டாக்டர் வள்ளுவர்" எனும் நூலில் சிறப்பு பிரதியை புரவலர் ஹாசீம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையு அருகில் தினகரன் பத்திரிகையில் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர். பிரபல நடிகரும் இயக்குனருமான எஸ்.தியாகராஜன் உட்பட ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (இன்பாஸ் சலாவுதீன்)

# பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் இளைஞர் பிரதிநிதித்துவம்?

பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்காக தன்னால் சமர்ப்பிக்கக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை இரண்டாவது மதிப்பீட்டுக்காக எடுத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கடிதம் மூலம் வியாழனன்று (05) தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல் சட்டங்களை இதன் பிரகாரம் திருத்துவதற்கான பரிந்துரைகளை அமைச்சு வழங்காததாலும், அதற்கான கால அவகாசம் ஜனவரி 14 ஆம் திகதியுடன் முடிவடைவதாலும், இது தொடர்பான விவாதத்தை ஜனவரி 14 ஆம் திகதிக்கு பின்னரான ஒரு நாளில் நடத்துமாறும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கேட்டுக்கொண்டார்.



பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் 25% இளைஞர் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான தனிநபர் பிரேரணையில் இருந்து உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்திற்கான அமைச்சின் பரிந்துரையை மாத்திரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாக்கிர் மாக்கார் கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளார்.




இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மலேசியாவின் தூதுக் குழு ஒன்று நேற்று கொழும்பு 02இல் உள்ள வேக்கந்தை ஜூம்ஆப் பள்ளிவாசலுக்கு நல்லிணக்க விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

பள்ளிவாசலின் நிருவாகத் தலைவர் பஸீர் லத்தீப் வரவேற்றார். இக்குழுவில் மலேசியாவின் மலாக்கா ஆளுநர் கலாநிதி மொஹமட் அலிபின் மொஹமட் ருஸ்டம்இ மலாக்கா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி அப்துல் ரஸாக்பின் இப்ராஹிம்இ இலங்கைக்கான மலேசியத் தூதுவராலயத்தின் கவுன்சிலர் மொஹமட் டுமிங்இ மலாய் சங்கத்தின் இலங்கைத் தலைவர் கலாநிதி அன்வர் உலுமுடீன் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர் கலாநிதி மொஹமட் அலிபின் மொஹமட் ருஸ்டம் கருத்து தெரிவிக்கும்போது இப்பள்ளிவாசலின் அபிவிருத்திப் பணிகளுக்கும் ஏழை மாணவர்களின் கல்விக்கும் உதவி செய்வதுடன் தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு முதற்கட்டமாக உலர் உணவு வழங்குவதற்கு ஒரு தொகுதி பணத் தொகையையும் வழங்கி வைத்தார். வரவேற்றுபுரையை கலாநிதி வஸீர் எம் லத்தீப் வழங்கினார். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)



கத்தாருக்கு விஜயம் செய்துள்ள அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் என். நஜ்முல் ஹுசைன் ஆகியோர் கத்தாரிலுள்ள இலங்கைத் தூதுவர் கௌரவ முஹம்மத் மஃபாஸ் மொஹிதீன் அவர்களைச் சந்தித்தனர். இச் சந்திப்பின் போது தமது நூல்களையும் தூதுவருக்கு கையளித்தனர். அத்துடன் தூதரக 3 ஆம் செயலாளர் திரு. ஏ. சி. கொடிக்கார , தொழில், நலன்புரி ஆலோசகர் திரு. கீர்த்தி எல். எம். முத்துக்குமாரன, தூதுவரின் பிரத்தியேக செயலாளர் திருமதி செவ்வந்தி உட்பட ஏனைய தூதரக அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினர். தூதரக சிரேஷ்ட அதிகாரி அஷ்ஷெய்க் ரஷீத் எம். பியாஸ் (நளீமி) யும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

# தொழில்நுட்பத் திறனும் மென் திறனும்



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்



ஒவ்வொரு தொழிலுக்கும் பொருத்தமான அறிவு தேவைப்படுவது போன்று திறன்களும் தேவைப்படுகின்றன. எமது பணியில் வெற்றி பெற, வேலையில் உயர்வு பெற இவை இரண்டுமே அவசியம்.

அறிவு என்பது ஒரு விடயத்ினை தத்துவார்த்தமாக யதார்த்தமாக புரிந்து கொள்வதை குறிக்கும். இதை கல்வியின் மூலம், வேலை அல்லது பணி அனுபவங்கள் மூலம் கற்றுக்கொள்ள முடியும்.

திறன் என்பது ஒரு விடயத்தை செய்வதற்கான ஆற்றல் தகுதி ஆகியவற்றை ஒத்ததாக இருக்கும். ஏதாவது ஒன்றில் ஈடுபட அல்லது ஒன்றை செய்ய எங்களுக்கு வழி இருக்கிறதா இல்லையா என்பதை திறன் தீர்மானிக்கிறது.

வேலை திறன்கள் என்று வரும்போது, தொழில்நுட்ப திறன்கள், மென் திறன்கள் என இரண்டு வகைகளாக பிரித்து நோக்கலாம். அவை ஒன்றுக்கொன்று மிகவும் வித்தியாசமானவைகளாக இருக்கும். ஆனால் ஒரு வேலையில் வெற்றிபெற, ஒரு துறையில் சாதனை படைக்க இந்த இரண்டும் அவசியமாகும்.

உதாரணமாக சமையல், கைத்தொழில்கள், கணினி, கைத்தொலைபேசி திருத்தம் செய்தல், கற்பித்தல் போன்ற குறிப்பிட்ட பணிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை அறிவது தொழில்நுட்ப திறன்கள் எனப்படும். இது ஒரு குறிப்பிட்ட தொழிலுடன் தொடர்புடையவை. கடந்தகால பணி அனுபவம் அல்லது பயிற்சியிலிருந்து தொழில்நுட்ப திறன்களைக் கற்றுக்கொள்ளலாம்.

தொழில்நுட்ப திறன்கள் என்பது அறிவியல், கலை, பொறியியல், கணிதம் போன்ற துறைகளில் நடைமுறைப் பணிகளைச் செய்யப் பயன்படும் திறன்களாகவும் அல்லது அறிவின் தொகுப்பாகவும் இவை இருக்கும்.

மென் திறன்கள் இதைவிட வித்தியாசமாகும். பணிபுரியும் இடங்களில் பணியாளர்களுடன் அல்லது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும், பணியிடத்தில் வெற்றி பெறவும் உதவும் பண்புக்கூறுகள் மற்றும் தனிப்பட்ட பண்புகள் மென் திறன்களில் அடங்கும். எடுத்துக்காட்டாக.... மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது, சிக்கல் தீர்ப்பது, முடிவெடுப்பது, சக பணியாளர்களுக்கு வழிகாட்டுவது, ஒரு குழுவை வழிநடத்துவது, விமர்சனங்களில் இருந்து கற்றுக் கொள்ளவது, படிப்பதற்கான ஏக்கம், ஊக்கம் உற்சாகம், நெகிழ்வான தன்மை, சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் பேச்சுவார்த்தை நடத்துதல், வழிமுறைகளைப் பின்பற்றுதல், சரியான நேரத்தில் வேலையைச் செய்தல் போன்றவை இதில் அடங்கும்.

அடிப்படையில், தொழில்நுட்பத் திறன்கள் உண்மையில் நமது வேலையை மிகவும் துல்லியமாகவும் செய்வதற்குத் தேவைப்படுகின்றன. மென்திறன்கள் எந்தவொரு வேலையிலும் அல்லது ஒவ்வொரு வேலையிலும் பயன்படுத்தக்கூடிய தனிநபர்களின் திறன்களாகும். இதை மக்கள் திறன்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

மென் திறன்களை வளர்ப்பது இலகுவானதல்ல, மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் அவற்றைப் பயிற்சி செய்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மென் திறன்கள் சிலருக்கு இயற்கையாகவே வெளிப்படலாம். பலர் பயிற்சியின் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டி வரலாம்.

தொழில்நுட்ப திறன்களை அளவிடுவது எளிதாக இருக்கும். எங்கள் கல்வி அறிவு, முந்தைய அனுப வங்கள் மற்றும் பல்வேறு சான் றிதழ் களைப் பார்த்து எங்கள் தொழில் நுட்ப திறன்களைப் பற்றிய நல்ல கருத்துக்களை பெறலாம். ஆனால் மென் திறன்களை மதிப்பீடு செய்வது ஒப்பீட்டளவில் கடினம், ஏனெனில் அவற்றை உண்மையில் கல்வி தகைமைகள் மூலம் அளவிட முடியாது, எங்கள் மென் திறன்களைப் பற்றிய அளவீட்டை பெற எங்களுடன் உரையாடல் செய்வதன் மூலம் அல்லது எங்கள் செயல்களை கண்காணிப்பதன் மூலம் மட்டுமே அறியலாம். இதற்கு பல நாட்கள் காத்திருக்க வேண்டி வரலாம். வலுவான மென் திறன்கள் ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான, உற்பத்திகூடிய பணிச் சூழலை உறுதி செய்கின்றன.

இங்கு இரண்டுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஒருவருக்கு தொழில்நுட்ப திறன்கள் மற்றும் மென் திறன்கள் இரண்டும் தேவை,

மேலும் எங்கள் தற்போதைய வேலையில் நாங்கள் வெற்றிபெற விரும்பினால், தொழில்நுட்ப திறன்கள் எங்களை வேலையில் ஈடுபட வைக்கும், ஆனால் மென் திறன்கள் எங்களை மேலே அழைத்துச் செல்லும். இரண்டும் அவசியம் என்பதை இதிலிருந்து அறியலாம்.

திறன்கள் என்பது மனிதர்களின் செயல்பாட்டில் அனுபவம், அறிவு மற்றும் ஆர்வம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த சக்தியாகும். என

- ஜான் ரஸ்கின் குறிப்பிட்டது எவ்வளவு சரியானது..

# அம்பாறை மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்திற்கான விளையாட்டுப்போட்டி









அம்பாறை மாவட்டத்தில் பல தசாப்தங்களாக இயங்கிவரும் சமூக சேவை நிறுவனமான GAFSO நிறுவனமானது HELVETAS, GCERF நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தி வரும் சமூக நல்லிணக்கம் மற்றும் வன்முறை தவிர்த்தல் எனும் "HOPE OF YOUTH" "இளைஞர்களின் நம்பிக்கை" எனும் வேலைத்திட்டத்தின் ஊடானக வன்முறை சிந்தனையை தவிரத்தல் எனும் தொனிப்பொருளில் இளைஞர்களுக்கான விளையாட்டு நிகழ்வானது 2022.12.18 ஞாயிறு அன்று அம்பாறை மிகிந்தபுர வித்தியாலயத்தில் கோலாகலமாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நான்கு மதங்களையும் சேர்ந்த 80 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டதுடன் ஆர்வமாக பல்வேறு போட்டிகளில் பங்குபற்றினர். இலக்குக்கு எறிதல், கிரிக்கெட், பந்துபறிமாற்றம், பலூன்மாற்றுதல், சங்கீதகதிரை, யானைக்கு கண் வைத்தல், கயிறு இழுத்தல் என்பன இடம்பெற்றதுடன் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் முகமான நான்கு மத இளைஞர்களும் இனைந்து "நாம் இலங்கையர்" எனும் தலைப்பில் நாடகமொன்றையும் அரங்கேற்றி இருந்தனர்.

இவ் விஷேட நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை பிரிவின் சிரேஷ்ட்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜயந்த ரத்னநாயக (SSP) கலந்து கொண்டதுடன் , கப்சோ நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜனாப். அப்துல் ஜப்பார், அரச சார்பற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இனணப்பாளர் இர்பான், தேசிய இளைஞர் மன்ற அதிகாரி ஹமீர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுரேகா எதிரிசிங்க, மற்றும் GAFSO நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் என பலரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் இன நல்லுறவை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களில் இவ் இளைஞர் குழு பல்வேறு சமூக நலன் விடயங்களில் பயிற்றுவிக்கப்பட்டு வருவதுடன், எதிர்கால சந்ததியினருக்கு இது மிகவும் வரவேற்க்க தக்க வேலைத்திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ரஞ்சித் சோமவன்ச ஐ.ம.ச. உடன் இணைவு



அகலவத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளராக கடமையற்றிய ரஞ்சித் சோமவன்ச எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

சில காலம்,மேல் மாகாண சபையின் சுகாதார,சுதேச மருத்துவ அலுவல்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சராகவும்,கல்வி, கலாச்சாரம் மற்றும் கலைத்துறை அமைச்சராகவும் பணியாற்றிய இவர், அக்காலகட்டத்தில் பல குறிப்பிடத்தக்க சிறப்பான பல பணிகளையும் முன்னெடுத்திருந்தார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரியான இவர், அக்காலத்தில் முக்கிய ஒரு மாணவர் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக முற்போக்கு மாணவர் முன்னணியின் தலைவராகவும் ஐக்கிய மாணவர் முன்னணியின் தலைவராகவும் பதவி வகித்த இவர்,திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அழைப்பின் பேரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியலில் பிரவேசித்தார்.

1993 ஆம் ஆண்டு மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர் மேல் மாகாண சபையின் சபை முதல்வர்,பிரதி சபை முதல்வர் உட்பட பல பதவிகளை வகித்து பல தசாப்த கால அரசியல் அனுபவம் கொண்ட ஒருவராவார்.







மிக நீண்டகாலமாக மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருந்த அக்கரப்பத்தனை பிரஸ்டன் தமிழ் வித்தியாலய பாடசாலைக்கு நுவரெலியா கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் என். கிருபாகரனின் வழிகாட்டலுக்கமைய சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமாரின் நிதி அனுசரணையில் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமார்,பாடசாலையின் அதிபர் பரமேஸ்வரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

(தலவாக்கலை பி.கேதீஸ்)

# அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி?

## ஆதரவாளர்கள் வலியுறுத்தல்!





அநுராதபுர மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்குமிடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று வெள்ளிக்கிழமை (6)தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் இடம்பெற்றபோது எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதில் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கும் கலந்து கொண்டார்.

இதன்போது அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதையே பெரும்பாலானோர் அதிகம் வலியுறுத்தினர். போட்டியிடும் உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றில் கட்சிக்கு வழங்கப்படும் வட்டார மற்றும் ஆசன ஒதுக்கீடுகள் என்பவற்றைப் பொறுத்தான ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவத்துடனான பேச்சுவார்த்தையின் பின்னர், இதுபற்றிய இறுதித் தீர்மானம் விரைவில் மேற்கொள்ளப்படுமென தீர்மானிக்கப்பட்டது.

பிரஸ்தாப தேர்தல் தொடர்பில் கொழும்பு மாநகர சபை உட்பட கொழும்பு மாவட்டம்,புத்தளம் மாவட்டம்,பதுளை மாவட்டம்,குருநாகல் மாவட்டம்,கம்பஹா மாவட்டம்,புத்தளம் மாவட்டம்,வன்னி மாவட்டம்,கேகாலை மாவட்டம் ஆகியவற்றிற்கான முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடனான சந்திப்புகளும் கட்சித் தலைவர் ஹக்கீமுடன் தனித்தனியாக இடம்பெற்றன. இவற்றிலும் கட்சியின் தேசிய அமைப்பாளர் எம்எஸ்.தௌபீக் எம்.பி.கலந்துகொண்டார்.

அத்துடன் ,இந்தத் தேர்தல் குறித்தான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட நிருவாக உத்தியோகர்களுடனான கலந்துரையாடலும் வெள்ளிக்கிழமை(6) மாலையில் தலைவர் ரவூப் ஹக்கீம்,செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் முன்னிலையில் "கட்சியின் தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்டத்திற்கான கலந்துரையாடல் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் சனிக்கிழமை (7)இடம்பெற்றது.

## முஸ்லிங்களின் பாரம்பரிய கலைகளை பாதுகாத்து வருபவர்களை கௌரவித்த கலாச்சார உத்தியோகத்தர்கள்





முஸ்லிங்களின் பாரம்பரிய கலைகளை பாதுகாத்துவரும் சாய்ந்தமருது முஹம்மதிய்யா கலைமன்ற இளம் கலைஞர்களிலிருந்து கலிகம்பு, சிலம்பம், றபான் போன்ற கலைகளை சிறப்பாக முன்னெடுத்துவரும் கலைஞர்களை பாராட்டி அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கலிகம்பு அரங்கேற்றமும் சாய்ந்தமருது கமு/ கமு/ லீடர் எம்.எச். எம். அஸ்ரப் வித்தியாலய மண்டபத்தில் முஹம்மதிய்யா கலைமன்ற தலைவர் கலைஞர் ஏ.எல். அலாவுதீனின் நெறிப்படுத்தலில் லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ட.எம். றிம்ஸான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும் சாய்ந்தமருது பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்கா, எஸ்.சுரேஷ், காரைதீவு பிரதேச கலாச்சார உத்தியோகத்தர், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளரும், எஸ்.எல்.டி.பி தேசிய கொள்கைப்பரப்பு செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ், தொழிலதிபர் யூ.எல். நயீம் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் எதிர்கால கலை, இலக்கிய செயற்பாடுகள், விருதுகளை விண்ணப்பித்து பெறுவது, கலைஞர்களுக்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவம் போன்ற விடயங்களை அதிதிகள் தமதுரையில் வலியுறுத்தி பேசினர். இந்நிகழ்வில் சாய்ந்தமருது முஹம்மதிய்யா கலைமன்ற சிரேஷ்ட மற்றும், கனிஷ்ட கலைஞர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

## மியன்டாட் லெஜன்ட் அணி அங்குராப்பணம்



(நூருள் ஹுதா உமர்)

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக்கழகத்தின் மற்றுமோர் அங்கமான மியன்டாட் லெஜன்ட் அணி அங்குராப்பணமும், புதிய சீருடை அறிமுகமும், மூன்று போட்டிகள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும் சாய்ந்தமருது மல்ஹரியன் லெஜன்ட் அணியினருக்கு எதிராக சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் சாய்ந்தமருது மியன்டாட் லெஜன்ட் அணியினர் மூன்று போட்டியிலும் வெற்றிபேற்று கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டனர். இத்தொடரின் அதி கூடிய ஓட்டங்களைப்பெற்றவராக மியன்டாட் லெஜன்ட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் யூ.எல்.எம். பாஹிம், அதிகூடிய விக்கெட்பெற்றவராக மியன்டாட் லெஜன்ட் அணியின் வீரர் எம்.ஏ. அஸ்தர் மற்றும் அதி கூடிய ஆறு ஓட்டங்களைப்பெற்றவராக மியன்டாட் லெஜன்ட் அணியின் எம்.ரி. பிர்தௌஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ. சம்சுதீன், எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் ஏ.எம். நாபித், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.











எட்டியாந்தோட்டை, பஹல கராகொடை அல்ஹிக்மா குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து சிறப்பித்த அஷ்ஷெய்க் றஸ்மி ஷாஹித் அமீனி மற்றும் சகோதரர் ஹாரூன் ஆகியோர் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும், விஷேட அதிதிக்கு அல்ஹிக்மா ஜு/ம்ஆப் பள்ளிவாசல் நிருவாக சபைத் தலைவர் சகோதரர் மாஹிர் அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும், கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்கள் மத்ரஸாவின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.கே. முஹம்மத் அவர்களுடன் இருப்பதையும் படங்களில் காணலாம்.

# தடுமாறியது இலங்கை இமாலய வெற்றியுடன் தொடரை கைப்பற்றியது இந்தியா!



அப்ரித் வஸீர்

இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கு இடையிலான டி20 தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. ராஜ்கோட் நகரில் இறுதி ஆட்டம் இடம்பெற்றது.

நேற்று (07) இடம்பெற்ற மூன்றாவதும் இறுதியுமான தீர்க்கமான போட்டியில் இந்திய அணி 91 ஓட்டங்களால் வெற்றிப் பெற்றதை தொடர்ந்து தொடரை கைப்பற்றியுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சூர்யகுமார் யாதவ் ஆட்டமிழக்காது 51 பந்துகளில் 112 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

9 ஆறு ஓட்டங்கள் மற்றும் 7 நான்கு ஓட்டங்கள் அடங்களாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

சுப்மன் கில் 46 ஓட்டங்களையும் மற்றும் ரா/ஹல் திரிபதி 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் டில்சான் மதுசங்க இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அதன்படி, 229 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் தசுன் சானக்க மற்றும் குசல் மெந்திஸ் ஆகியோர் தலா23 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் அக்சர் படேல் மூன்று விக்கெட்டுக்களையும் ஹர்திக் பாண்டியா, உம்ரன் மலிக் மற்றும் யுஸ்வந்தர சஹால் ஆகியோர் தல இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சூர்யகுமார் யாதவ் மற்றும் தொடர் நாயகனாக அக்ஷர் படேல் ஆகியோர் தெரிவானார்கள்.

ஜனவரி3ஆம் திகதி நடைபெற்ற முதலாவது டி20 ஆட்டத்தில் இந்திய அணி 2 ஓட்டங்களினால் இலங்கை அணியை வீழ்த்தியிருந்தது.இப் போட்டி மும்பை வன்கடே மைதானத்தில் இரவு ஆட்டமாக அமைந்திருந்தது.இப் போட்டியில்

அதிகபட்சமாக தீபக் ஹூடா 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் இந்தியா 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்களை எடுத்தது.

இஷான் கிஷான் 29 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 37 ரன்களும், அக்சர் படேல் 20 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்கள், ஸ்ட்ரைக் ரேட் 155 ஓட்டங்கள், ஹர்திக் பாண்டியா 27 பந்தில் 29 ஓட்டங்களை எடுத்தனர்.

இலங்கையின் சிறந்த பந்துவீச்சாளர்களான தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க, சமிக கருணாரத்ன, மஹீஷ் தீக்ஷன மற்றும் டில்ஷான் மதுஷங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

அதிகபட்சமாக தசுன் ஷனக 27 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் உட்பட 45 ஓட்டங்களை எடுத்து 166.66 ஸ்டிரைக் ரேட்டுடன் அதிகபட்சமாக 20 ஓவர்களில் 160 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியை தழுவியது இலங்கை.

குசல் மெண்டிஸ் 25 பந்துகளில் 5 பவுண்டரிகள் உட்பட 28 ஓட்டங்களையும், சமிக கருணாரத்ன 16 பந்துகளில் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் 143.75 ஸ்ட்ரைக் ரேட்டுடன் விளாசினார்.

வனிந்து ஹசரங்க 10 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரியுடன் 210 ஸ்டிரைக் ரேட்டுடன் 21 ஓட்டங்களை எடுத்தார்.

அறிமுக வீரர் சிவம் மாவியின் சிறந்த பந்து வீச்சாளர் - தனது முதல் டி20 போட்டியில் 22 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார், உம்ரான் மாலிக் மற்றும் ஹர்ஷல் படேல் இருவரும் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தீபக் ஹூடா 23 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரியுடன் 178.26 ஸ்ட்ரைக் ரேட்டுடன் ஆட்டமிழக்காமல் 41 ரன்களை விளாச, அவரது பவர்-ஹிட்டிங் பேட்டிங் செயல்பாட்டிற்காக ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

மும்பை நகரில் நடைபெற்று முடிந்த டி20 தொடரின் முதல் போட்டியினை அடுத்து இலங்கை மற்றும் இந்திய அணிகள் இடையிலான இரண்டாவது டி20போட்டி கடந்த வியாழக்கிழமை (05) பூனே நகரில் நடைபெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் தலைவர் ஹர்திக் பாண்டியா முதலில் இலங்கை வீரர்களை துடுப்பாடப் பணித்திருந்தார்.



முதல் தோல்வியுடன் இலங்கை அணி இப்போட்டியில் மாற்றங்களின்றி களமிறங்க, இந்தியா சஞ்சு சாம்ஷன் மற்றும் ஹர்சால் பட்டேல் ஆகியோருக்குப் பதிலாக அறிமுக வீரர் ராகுல் த்ரிபாட்டி மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கியிருந்தது.

தொடர்ந்து நாணய சுழற்சிக்கு அமைய முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த இலங்கை கிரிக்கெட் அணிக்கு குசல் மெண்டிஸ் ஏனைய ஆரம்பவீரரான பெதும் நிஸ்ஸங்கவுடன் இணைந்து அதிரடியானஆரம்பத்தினை வழங்கினார்.

குசல் மெண்டிஸ் □ பெதும் நிஸ்ஸங்க ஜோடி இலங்கை அணியின் முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 80 ஓட்டங்களைப் பதிவு செய்ததோடு இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்த குசல் மெண்டிஸ் தன்னுடைய 11ஆவது டி20 அரைச்சதத்துடன் 31 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களை எடுத்திருந்தார்.மெண்டிஸின் விக்கெட்டினை அடுத்து புதிய வீரராக வந்த பானுக்க ராஜபக்ஷ உம்ரான் மலிக்கின் வேகத்தினை ஈடு செய்ய முடியாமல் 2 ஓட்டங்களுடன் மைதானத்தை விட்டு நடந்தார். பானுக்க ராஜபக்ஷவின் பின்னர் பெதும் நிஸ்ஸங்கவின் விக்கெட்டும் இழக்கப்பட்டது. அக்ஷார் பட்டேலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த பெதும் நிஸ்ஸங்க 4 பௌண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் பின்னர் இலங்கை அணியின் மத்திய வரிசை சற்று தடுமாறிய போதும் சரித் அசலன்க அதிரடியாக ஆடி ஓட்டங்கள் பெற்றார். அதன்படி வெறும் 19 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்ட சரித் அசலன்க 4 சிக்ஸர்கள் அடங்கலாக 37 ஓட்டங்களை எடுக்க இலங்கை அணியின் ஓட்டங்களும் அதிகரிக்கத் தொடங்கின.

சரித் அசலன்கவின் விக்கெட்டின் பின்னர் இறுதி நேரத்தில் அதிரடி காட்டிய அணித்தலைவர் தசுன் ஷானக்கவின் அசத்தல் ஆட்டத்தோடு இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்கள் எடுத்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பில் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த தசுன் ஷானக்க தன்னுடைய 5ஆவது டி20 அரைச்சதத்தினைப் பதிவு செய்து 22 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அத்துடன் இப்போட்டியில் 20 பந்துகளில் அரைச்சதம் பதிவு செய்த ஷானக்க, இலங்கை அணிக்காக டி20போட்டிகளில் அதிவேகமாக அரைச்சதம் கடந்த வீரர் என்கிற புதிய சாதனையினை நிலை நாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதேநேரம் களத்தில் ஆட்டமிழக்காமல் இருந்த ஏனைய வீரரான சாமிக்க கருணாரட்ன 11 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் உம்ரான் மலிக் 3 விக்கெட்டுக்களையும், அக்ஷார் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும், யுஸ்வேந்திர சாஹல் ஒரு விக்கெட்டினையும் சாய்த்திருந்தனர்.

பின் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 207 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய இந்திய கிரிக்கெட் அணி ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தடுமாறியது. அதன்படி ஒரு கட்டத்தில் 57 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இந்திய அணிக்கு சூர்யகுமார் யாதவ் □ அக்ஷார் பட்டேல் ஜோடி ஆறாம் விக்கெட்டுக்காக அபாரமான இணைப்பாட்டம் ஒன்றினை வழங்கியிருந்தது. 91 ஓட்டங்கள் வரை நீடித்த இந்த இணைப்பாட்டத்திற்குள் அக்ஷார் பட்டேல் மற்றும் சூர்யகுமார் யாதவ் இருவரும் அரைச்சதங்களை விளாசியிருந்தனர்.

இந்த இணைப்பாட்டம் டில்சான் மதுசங்க கைப்பற்றிய சூர்யகுமார் யாதவ்வின் விக்கெட்டோடு முடிவுக்கு வந்ததோடு அவர் தன்னுடைய 12ஆவது டி20 அரைச்சதத்துடன் 36 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

மறுமுனையில் களத்தில் இருந்த அக்ஷார் பட்டேல் சிவம் மாவியுடன் இணைந்து போட்டியின் இறுதி ஓவர் வரை வெற்றிக்காக போராடிய போதும் அவரது போராட்டம் வீண்டிக்கப்பட்டது.

அதன்படி இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து இரண்டாவது போட்டியில் தோல்வியினைத் தழுவியது.

இந்திய அணியின் துடுப்பாட்டம் சார்பில் அக்ஷார் பட்டேல் 31 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்கள் பெற்றார். மறுமுனையில் சிவம் மாவி 15 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 26 ஓட்டங்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் பந்துவீச்சு சார்பில் கசுன் ராஜித, அணித்தலைவர் தசுன் ஷானக்க மற்றும் டில்சான் மதுசங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்து தமது தரப்பு வெற்றியினை உறுதி செய்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் தசுன் ஷானக்க தெரிவாகியிருந்தார்.

இலங்கை அணியின் இந்திய சுற்றுப் பயணத்தில் அடுத்த கட்டமான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (10) ஆரம்பமாகுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசியாக் கிண்ண அறிவிப்பு

இந்த ஆண்டு (2023) செப்டம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஆசியக்கிண்ணத் தொடருக்கான குழுக்களின் விபரத்தை ஆசிய கிரிக்கெட் சபை தலைவர் ஜெய் ஷா வெளியிட்டுள்ளார்.

அதன்படி நடப்பு சம்பியனான இலங்கை அணியுடன், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் ஒரு குழுவில் இடம்பெற்றுள்ளதுடன் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தகுதிபெறும் அணி மற்றுமொரு குழுவில் இடம்பெறவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற ஆசியக்கிண்ணத் தொடருக்கான குழு கட்டமைப்பு போன்று இந்த ஆண்டும் குழு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி குழுநிலையில் ஒவ்வொரு அணிகளும் எதிரணியுடன் ஒரு தடவை மோதவுள்ளதுடன், முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு தகுதிபெறும்.

சூப்பர் 4 சுற்றில் ஒவ்வொரு அணிகளும் எதிரணிகளுடன் ஒரு தடவை மோதவுள்ளதுடன், முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும். இதில் குழுநிலையில் 6 போட்டிகள் மற்றும் சூப்பர் 4 சுற்றில் 6 போட்டிகள் அடங்கலாக இறுதிப்போட்டியுடன் மொத்தமாக 13 போட்டிகள் நடைபெறவுள்ளன. இம்முறை தொடரானது ஒருநாள் போட்டிகளாக நடத்தப்படவுள்ளன.

தொடரை நடத்துவதற்கான உரிமத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெற்றுள்ளபோதும், பல சர்ச்சைகளினால் போட்டித்தொடர் எங்கு நடத்தப்படும் என்ற அறிவிப்பு உத்தியோகபூர்வமாக இன்னும் வெளியிடப்படவில்லை.






# உடுகொட அல்-அஸ்தர் பாலர் பாடசாலையின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்



(ஹிமாயா ஹமீட்)

கம்பஹா மாவட்ட அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள உடுகொட அல்-அஸ்தர் பாலர் பாடசாலையின் 28 ஆவது ஆண்டுக்கான கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 25 ஆம் திகதி உடுகொட, அரபா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் விளையாட்டரங்கில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மாணவன் எம்.இஸட்.மொஹமட் கிதஷராத் ஓத, என்.எம்.லுக்மான் அதனை தமிழில் மொழிபெயர்த்தார். எம்.எம். எம்.ஹாமித் தமிழில் வரவேற்புரை நிகழ்த்த, ஏ.ஏ.ஏ.அஷ்மர் ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார். இவ்வருடம் பாலர் பாடசாலையை விட்டு விலகி முதலாம் தரத்திற்கு சேரவிருக்கும் மாணவிகளின் வரவேற்பு நடனம் முதலில் அரங்கேற்றப்பட்டது.

இஸ்லாமிய கீதங்கள், கதைகள், சிறுவர் பாடல்கள் மற்றும் நடனங்கள் என சிறார்களால் அரங்கேற்றப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் அரங்கையே அழகுபடுத்தியது. மாணவி எம்.எம். ஆமீனாவின் தந்தையும், பூகொட குமாரிமுல்லை மகாவித்தியாலய ஆசிரியருமான எம்.என்.எம். மிப்ராஸினால் பெற்றோர் உரை நிகழ்த்தப்பட்டது.

கம்பஹா கல்வி வலய முன்னாள் ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகரும், கஹட்டோவிட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் பொறுப்பாசிரியையுமான எம்.எம். கே.மௌபியா பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இக்கலை விழாவிற்கு சியன ஊடக வலையமைப்பு மற்றும் நியூஸ் பிளஸ் ஊடக வலையமைப்பு என்பன ஊடக அனுசரணை வழங்கியிருந்தன.

முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என். எம்.அமீனின் தலையீட்டின் கீழ் லேன்ட் மார்க் நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் எம்.ஏ.சி.மஹ்ரூமின் நிதியுதவியுடன் இவ்வாண்டு உடுகொட அரபா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் முதலாம் தரத்திற்கு இணையவிருக்கும் 41 மாணவ மாணவிகளுக்கான குடிநீர் போத்தல்கள் மற்றும் உணவுப் பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. ஹமீட் உதவும் கரங்கள் அமைப்பு இம்மாணவர்களுக்கான புத்தகப் பைகளை ஏற்பாடு செய்திருந்தது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கம்பஹா கல்வி வலய முன்னாள் ஆசிரிய ஆலோசகரும், கஹட்டோவிட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் பொறுப்பாசிரியையுமான எம்.எம்.கே.மௌபியா மாணவர்களை வாழ்த்தி சிறப்புரை நிகழ்த்தியதுடன், மாணவிகளுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

அத்துடன் இப்பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்குமான பரிசுப் பொருட்களை பிரபல தொழிலதிபரும், Fine Enterprices நிறுவனத்தின் தலைவருமான எம்.ஏ.எம்.இக்ராம், உடுகொட ஐ.தே.க. அமைப்பாளர் எம்.ஆர்.எம்.பவாஸ் மற்றும் மேலும் பலர் இணைந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு மொத்தமாக 198 நாட்கள் பாலர் பாடசாலை இயங்கிய நிலையில், ஒருநாள் தவறாது பாடசாலைக்கு வருகை தந்த மாணவி எம்.எம்.ஆமீனா ஆசிரியர்களால் பரிசில் வழங்கிக் கௌவிக்கப்பட்டார்.

1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாலர் பாடசாலையின் அதிபர் எம்.ஆர்.எப்.ரிஹானா, ஆசிரியைகளான எம்.ஆர்.எப்.மஹ்தியா மற்றும் உதவி ஆசிரியை நஸ்கா ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு சிறந்த முறையில் பயிற்சிகளை வழங்கியிருந்தமையால் மேடைகளில் அரங்கேறிய அனைத்து நிகழ்ச்சிகளையும் அதிதிகள், பெற்றோர் மற்றும் பார்வையாளர்கள் மெய்மறந்து ரசித்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. செல்வி. எம்.என்.ஸைனா செரீன் மற்றும் ஊடகவியலாளர் ஹிமாயா ஹமீட் ஆகியோர் இணைந்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியமை இந்நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது.

சிங்களப் பாடல்கள், தமிழ்ப் பாடல்கள், அரபுப் பாடல்கள் என மூவின மக்களையும் ஒன்றிணைத்து அரங்கேறிய நடன நிகழ்ச்சிகள் இன ஒற்றுமையை பிரதிபலித்திருந்ததுடன், மாணவர்களின் ஒருங்கிணைத்த நடன நிகழ்ச்சிகள் ஏனைய பாலர் பாடசாலைகளுக்கு ஒரு முன்னுதாரணத்தை எடுத்தியம்பியதாக இருந்தது.

இறுதியாக பாலர் பாடசாலையின் அதிபரான எம்.ஆர்.எப்.ரிஹானாவின் நன்றியுடையுடனும், மாணவர்களின் ஸலவாத்துடனும் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.





தோப்பூர், அல்லைநகர் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற மன்பஉல் ஹைறாத் முன்பள்ளியில் கடந்த 2022 ம் ஆண்டு முன்பள்ளி கற்கையை நிறைவு செய்த மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் சனியன்று அல்ஹம்றா மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இம்முன் பள்ளியின் தலைவரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எஸ்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக விசேட பல் வைத்திய நிபுணர் எஸ்.எல்.பலா/ஹதீன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது பாத்திமா பௌண்டேசன் மூலம் ,கற்று வெளியேறிய மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.ஏ.எம்.அஸ்மி)